

# வருக, நூலகத்திற்கு வருகை புரிக,

*“வார்த்தைகளால் நீங்கள் புரிந்து கொள்ள அறிகிறீர்கள்.
வார்த்தைகளால், நீங்கள் விளக்கம் அளிக்க அறிகிறீர்கள்.
மற்றும் வார்த்தைகள் உதவுகின்றன நாம்
ஒருங்கிணைந்து வாழ”*

BENKT-ERIK HEDIN

தனது வாழ்க்கையின் துவக்கத்திலேயே கதைகளை கேட்கும் வாய்ப்பு பெறும் ஒரு குழந்தை, மொழி குறித்த ஒரு அருமையான அறிவு நுட்பத்தை வளர்த்துக் கொள்கிறது. உங்கள் குழந்தைகளுக்காக சத்தமாக படிப்பது, அவர்களின் மொழிப் புலமை மற்றும் கற்பனையைத் தூண்டும் ஒரு மிகச் சிறந்த வழியாகும்.

உங்கள் குழந்தைகளுடன் பேசியும், அவர்கள் சொல்வதைக் கேட்டும் அவர்களின் மொழிப் புலமையை நேர்த்தியாக்க நீங்கள் உதவ முடியும். உங்கள் குழந்தைகளுடன் சேர்ந்து படியுங்கள், பாருங்கள், கதை சொல்லுங்கள், விளக்குங்கள் மற்றும் விளையாடுங்கள், அவர்கள் சிறிய குழந்தைகளாக இருக்கும் போதிலிருந்தே இவற்றை செய்யத் துவங்குங்கள் முதல் நிமிடத்திலிருந்தே, ஏனெனில் அக்காலத்தில்தான் அவர்களின் மொழிப் புலமைக்கான அடித்தளம் போடப்படுகிறது.

உங்கள் குழந்தைகளுடன் உங்களின் சொந்த மொழியிலேயே பேசுங்கள். தங்கள் சொந்த மொழியில் நன்கு வளம் பெற்ற குழந்தைகள், பிற மொழிகளை எளிதாக கற்றுக் கொள்கிறார்கள்.

அனைத்து வயது குழந்தைகளுக்கும் ஏற்ற புத்தகங்கள் நூலகத்தில் காணப்படுகின்றன. தளிர் நடைக் குழந்தைகளுக்கான தடித்த அட்டையுடன் கூடிய புத்தகங்கள், சித்திர புத்தகங்கள், குழந்தைகளுக்கான ஒலியியைபு அடைந்த சிறு பாடல்கள் அடங்கியப் புத்தகங்கள், கவிதைப் புத்தகங்கள், தேவை நோக்கீட்டு புத்தகங்கள், தேவைகள் பற்றிய கதைகள் கொண்ட புத்தகங்கள் போன்றவை மிகுந்த அளவில் நூலகத்தில் காணப்படுகின்றன.

அனைத்து வயதினருக்கும் பொருத்தமான பல்வேறு மொழிகளிலான புத்தகங்கள் நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளன.
நீங்கள் படிக்க விழையும் புத்தகங்களை கண்டுபிடிக்க உதவுவதில் நாங்கள் பெருமகிழ்ச்சி அடைகிறோம் மற்றும் கட்டணம் எதுவுமின்றி இலவசமாக புத்தகங்களை இரவல் பெற்றுச் செல்லலாம்.

வயது வந்தவர்களுக்கெனவும், இந்நூலகத்தில் குழந்தைப் பருவ பிணிகள், குழந்தை உளநூல், குழந்தை வளர்ப்பு போன்ற தலைப்புக்களின் கீழ் புத்தகங்கள் உள்ளன. மேலும் குழந்தைகள் மற்றும் பெரியவர்களுக்கென பல்வேறு மொழிகளிலும் புத்தகங்கள் நிரம்பியுள்ளன.

நூலகத்தில் உங்களை சந்திக்கிறோம்!









ILLUSTRATIONER: MARGARETA NORDQVIST

Länsbiblioteken i samarbete med Internationella biblioteket i Stockholm.

Tamil